# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

**Tamil**

**₹ 10/-**

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE
REACHING NATIONS

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

**Vol. XXVIII** OCTOBER 2023 **No. 10**


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

## நீதிமொழிகள் 24:1-10

1. பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே; அவர்களோடே இருக்கவும் விரும்பாதே.
2. அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும், அவர்கள் உதடுகள் தீவினையைப் பேசும்.
3. வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே நிலைநிறுத்தப் படும்.
4. அறிவினாலே அறைகளில் அருமையும், இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும்.
5. ஞானமுள்ளவன் பெலமுள்ளவன்; அறிவுள்ளவன் தன் வல்லமையை அதிகரிக்கப் பண்ணுகிறான்.
6. நல்யோசனை செய்து யுத்தம் பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்.
7. மூடனுக்கு ஞானம் எட்டாத உயரமாயிருக்கும்; அவன் நியாய ஸ்தலத்தில் தன் வாயைத் திறவான்.
8. தீவினைசெய்ய உபாயஞ்செய்கிறவன் துஷ்டன் என்னப்படுவான்.
9. தீயநோக்கம் பாவமாம்; பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன்.
10. ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவாயானால், உன் பெலன் குறுகினது.

## நீங்கள் அசாதாரணமான கிரியைகளைச் செய்ய தேவனால் கட்டளைப் பெற்றவர்கள்!

## You are divinely summoned to accomplish extra-ordinary deeds!

போதகர் ஏஞ்சலின் செல்வ குமாரி



ஒரு சாதாரண வாழ்க்கை வாழ கர்த்தர் நம்மை அழைக்கவோ, உருவாக்கவோ இல்லை என்பதை தானியேல் 11:32 நமக்கு நினைவுப்படுத்துகிறது. "**... தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள்.**" – தானியேல் 11:32.

கர்த்தர் தமது ஜனங்கள் அவரை அறியும் அறிவில் முதிர்ச்சியுள்ளவர்களாகவும், விசுவாசத்தில் திடமுள்ளவர்களாகவும் கிரியை செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். எத்தகைய சூழ்நிலை வந்தாலும், அதைச் சந்தித்து வெற்றியடைபவர்களாய் அவரது ஜனம் இருக்க வேண்டும்.

அசாதாரண விசுவாசத்தை சாதாரண வழியிலே அடைய முடியாது என்பதை இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார். எனவேதான், பரிசுத்த ஆவியானவரை அவர் நமக்கு வாக்களித்துள்ளார். அவர் நம்மை பெலப்படுத்தி நமது விசுவாசத்தின் பெலனை வெளிப்படுத்துவார். "**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து ... பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.**" என்று அப்போஸ்தலர் 1:8 இல் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் சீடர்களின் வாழ்க்கையை நாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அவர்கள் பரிசுத்த ஆவியின் அனுபவத்தைப் பெறுவதற்கு முன் வாழ்ந்த வாழ்க்கைக்கும், அதற்குப் பின் வாழ்ந்த வாழ்க்கைக்கும் பெரிய வித்தியாசத்தை நாம்

தொடர்ச்சி 4–ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



**கிறிஸ்தவ யூடியூப் சானல்!**

*போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!*

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**"தேவன் ஒருதரம் விளம்பினார்,
இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்;
வல்லமை தேவனுடையது என்பதே."**

– சங்கீதம் 62:11



டாக்டர் A. ரிச்சர்ட் சாமுவேல்

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

நமது **அழைப்பின் எதிரொலியின்** ஆங்கில இணை ஆசிரியரான டாக்டர் A. ரிச்சர்ட் சாமுவேல் M.A., Ph.D. அவர்கள் ஆகஸ்டு 30, 2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். டாக்டர் A. ரிச்சர்ட் சாமுவேல் அவர்கள் சென்ற சில நாட்களாக சுகவீனமாக இருந்து வந்தார்கள். மேலும் அவர்கள், நீண்டகாலமாக இவாஞ்சலிகல் யூனியன் போன்ற இதர பல ஊழியங்களுடன் தனது எழுத்துப்பணிகள், போதனைகள் மற்றும் ஆலோசனைகள் மூலமாக ஊழியம் செய்து, நம்முடனும் இணைந்து நல்ல ஒரு சகோதரராக இருந்து நமது ஊழியத்திற்கு முக்கிய பங்காற்றி, ஆங்கில இணை ஆசிரியராக உறுதுணையாக இருந்து வந்தார்கள். ஆரம்பத்திலிருந்து இறுதி வரைக்கும் எவ்வித பொருளாதார உதவிகளோ அல்லது சம்பளமோ பெற்றுக் கொள்ளாமல், தன்னார்வ ஊழியராக நம்முடன் ஊழியம் செய்தார்கள். இந்த கடினமான நேரத்தில் அவர்களுடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்காக ஜெபித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு;** ... 2 தீமோத்தேயு 4:2 என்ற வேதக்கட்டளைப்படி எங்களால் இயன்ற பல்வேறுவிதங்களில் இயேசு கிறிஸ்துவின் அன்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோம்.

- பல மொழிகளில் திருச்சபைகள்,
- 16 மொழிகளில் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள்,
- தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய 3 மொழிகளில் **வேதாகமத்** (BIBLECOR) **தபாற்கல்விகள்,**
- தமிழ், ஆங்கிலம் ஆகிய 2 மொழிகளில் **இறையியல் தபாற்கல்விகள்,**
- தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் மூன்று **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** (மாலை மற்றும் முழுநேரம்),
- **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** என்ற கிராம உயர்நிலை ஆங்கில வழிப் பள்ளி,
- 16 மொழிகளில் அச்சுப் பிரதிகளை அச்சடிக்கும் ஆப்செட் அச்சகம்,
- ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்து அவர்களின் தரத்தை உயர்த்தும் சமூகப்பணி,
- பல மொழிகளில் சுவிசேஷக் கூட்டங்கள்,
- கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பின் சுவிசேஷத்தை தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய நான்கு மொழிகளில் **அழைப்பின் எதிரொலி** யூடியூப் ஊழியங்களின் மூலம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

இத்தகு ஊழியங்களின் வாயிலாக நற்பலனைப் பெறுகிறோம். கிருபை அளித்து வரும் நம் தேவாதி தேவனுக்கு மகிமையுண்டாவதாக. தோள் கொடுத்து நிற்கும் உங்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

Bro. N. Prakasam, M.A., General Manager
Dr. Rabinder Boaz, M.S.
Bro. K. Puratchivendan

**EDITORIAL BOARD**

Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**

Echo of His Call

## வளர்ந்து வரும் யூடியூப் ஊழியம்

முன்காலங்களில் தொழில்நுட்ப சாதனங்களாகிய தொலைக்காட்சி, இன்டெர்நெட், செல் போன்கள், யூடியூப் போன்றவற்றை பயன்படுத்தி சுவிசேஷ ஊழியம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற அறிவுரைகள் ஆவிக்குரிய உலகில் பரவலாகச் சொல்லப்பட்டு வந்தன. நாங்களும் அப்படியே சொன்னோம். ஆனால் இக்காலத்தில் தினசரி செய்தித்தாள்கள், புத்தகங்களை படித்தல், வானொலி செய்திகள், தொலைக்காட்சி செய்திகளை கேட்டல், சபை கூடிவருதல், ஆவிக்குரியக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் போன்ற பழக்க வழக்கங்கள் நம்மிடையே வெகுவாகக் குறைந்து விட்டன.

## கைபேசி என்றழைக்கப்படும் செல்போன்

சிறுவர்களிலிருந்து வயதானவர்கள் வரை, பரம ஏழைகளிலிருந்துப் பெரிய செல்வந்தர்கள் வரை ஏறக்குறைய எல்லாருடையக் கைகளிலும் ஒன்றுக்கும் மேலான செல்போன்களும், அவை ஒவ்வொன்றிற்குள்ளும், ஒன்றுக்கு மேல் SIM கார்டுகளும் பொருத்தப்பட்டு கோடிக்கணக்கான செல்போன்கள் உலகமெங்கிலும் செயல்பாட்டில் உள்ளன.

ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்களை எளிதில் சந்திப்பதற்கு, ஆவிக்குரிய மக்கள் விரும்பாத செல்போன்கள்தான் பயன்படுகின்றன. இதனை பயன்படுத்தினால் ஏராளம் தவறான பின்விளைவுகள் உண்டு என்றாலும், இக்கால மக்களை சுவிசேஷத்தால் சந்திப்பதற்கு வேறுவழியில்லாமல் செல்போன் பயன்படுகிறது.

உலகப்பிரகாரமான செய்திகளையும், கேளிக்கைகளையும் கைபேசியில் மக்கள் பார்த்து, கேட்கிற அதே நேரத்தில் தேவ செய்திகளையும் கேட்க வாய்ப்பு உண்டாகும் அல்லவா? இப்படித்தான் ஆரம்ப காலத்தில் உலகப்பிரகாரமான தொலைக் காட்சிகளில் வரும் சினிமா, நாடகங்கள் மற்றும் செய்திகள் மத்தியில் 15 நிமிட தேவ செய்திகளையும் பிரசங்கித்தோம். நல்ல பலன் கிடைத்தது. இதன் விளைவாக இன்று ஏராளம் முழுநேர ஆவிக்குரிய தொலைக்காட்சி சானல்கள் வந்துள்ளன. பயன் பெறுகிறோம். இதில் சந்தேகம் இல்லை.

எனவே, இது ஓர் ஆபத்தான ஒரு உபகரணமாயிருந்தாலும், எப்படியாவது சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு அழிவிற்கும், தற்கொலைகளுக்கும் நேராக செல்லும் மக்களை இயேசு கிறிஸ்துவின் வல்லமையின் மூலம் விடுவிக்க வேண்டுமே என்ற தாகத்துடன் நாமும்கூட **Echo of His Call** என்ற ஒரு யூடியூப் சானலை உருவாக்கி, தினமும் காலை 5.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், இந்தி ஆகிய 4 மொழிகளில் ஐந்து நிமிட செய்தியை உலக மக்களின் மீட்புக்காக ஒளிபரப்புகிறோம். ஏராளம் மக்கள் செல்போன் பயன்பாட்டில் மூழ்கி இருப்பதால், இயேசு கிறிஸ்து இல்லாத வாழ்க்கை வாழும் இம்மக்களை அழிவினின்று மீட்க இருக்கும் சாதனமும், அதுவாகத்தான் இருக்கிறது. எனவே, வேறு வழியில்லாமல் இந்த ஊழியத்தையும் செய்கிறோம். இதன்மூலம் உலக நாடுகளில் உள்ள எல்லா தரத்திலும் உள்ள மக்கள் பயன்பெற்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்புக்குள் வருகின்றனர்.

சில சாட்சிகளை கீழே வெளியிடுகிறோம்:

*"நான் ஆவிக்குரிய வகையில் மிகவும் சோர்ந்து போய் களைத்து இருந்தேன்; உங்கள் செய்தி என்னைத் தேற்றி, தூக்கி நிறுத்தியது."*

*"வாழ்க்கையில் பல்வேறு கஷ்டங்களினால் வாழவேப் பிடிக்காமல் இருந்தேன். உங்கள் யூடியூப் ஜெபம் எனக்கு பெலன் கொடுத்து வாழ வைத்தது."*

*"வியாதிப்படுக்கையில் இருந்தேன். உங்கள் யூடியூப் சாட்சியின் வார்த்தைகள் எனக்கு சுகம் பெற்றுத் தந்தன."*

*"குடும்பமாக உங்கள் செய்திகளைக் கேட்டு ஜெபங்களில் பங்கு பெற்றதால் குடும்ப ஐக்கியமும், சுகமும் கிடைத்தன."*

*"ஓய்வு பெற்ற தேவ ஊழியனாகிய எனக்கு மிகவும் அதிகமான வேலையை உங்கள் யூடியூப் மூலம் கொடுத்து விட்டீர்கள். தினமும் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் தங்கள் யூடியூப் செய்திகளைப் பார்த்த உடனே என்னிடம் உள்ள எல்லா WhatApp Number-களுக்கும் அனுப்புவதும், பகிர்ந்து கொள்வதுமே என் முழுநாள் வேலையாயிருக்கிறது. அருமையான ஊழியம், ஆசீர்வாதமான செய்திகள் உலகமெங்குமுள்ள மக்களின் வாழ்க்கையை இரட்சிக்கின்றன. தொடர்ந்து செய்யுங்கள். மேலும் 50 வருடங்களாக தங்களைப் பற்றி நன்கு அறிந்துள்ள என்னால், தாங்கள் 55 வருட காலமாக தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கும் கடுமையான பணியை, உழைப்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது."*

*"என் வீட்டை அனுதினமும் அதிகாலையில் தேடிவரும் உங்கள் யூடியூப் செய்திகளைக் கேட்க ஆரம்பித்த பின்னர் ஒழுங்காக நாங்கள் எங்கள் தேவாலயத்திற்குச் சென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்கிறோம். தினமும் அதிகாலையில் முதல் வேலையாக தனிஜெபம் மற்றும் குடும்ப ஜெபங்களை முடித்து, அதன் பின்னர் தங்களின் யூடியூப் செய்திகளைக் கேட்டபின்னர்தான், அடுத்த வேலைகளைச் செய்கிறேன்."*

இப்படியாக, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவித்த மக்களிடம் இருந்து ஏராளமான தகவல்களைப் பெற்று வருகிறோம். எனவேதான் இந்த யூடியூப் ஊழியத்தை செய்கிறோம். தேவசித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

உலகளாவிய அளவில் மக்கள் ஒவ்வொருவருக்குள்ளும் தனிப்பட்ட முறையில் நன்மையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்ற இந்த ஊழியத்தினிமித்தம் நாங்கள் களிகூர்ந்து இப்படிப்பட்ட சாட்சிகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

## உங்கள் கடமை

நீங்கள் விரும்பினால், தங்களது செல்போனை பயன்படுத்தி நமது **Echo of His Call Channnel** ஐ Subscribe செய்வதற்கு என்னுடைய +91–98410 71858 என்ற எண்ணை உங்கள் செல்போனில் பதிவு (save) செய்து கொள்ளுங்கள். ஏனென்றால் எங்களுடைய YouTube-Link – ஐ +91–98410 71858 என்ற எண்ணிலிருந்துதான் அனுப்புகிறோம். வாட்ஸ் அப் மற்றும் செல்போன் மூலம் என்னை தொடர்பு கொள்ள வேண்டுமானால் +91–98412 71858 என்ற எண்ணை பயன்படுத்துங்கள். இதையும் உங்கள் செல்போன்களில் பதிவு (save) செய்து கொள்ளுங்கள். ஆக எங்களின் இரண்டு செல்போன் எண்களாவன: +91–98410 71858 மற்றும் +91–98412 71858.

நீங்கள் எங்கள் செய்திகளைப் பார்க்க விரும்பினால் **Echo of His Call** சானலை Subscribe பண்ணுங்கள்; மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இதில் உண்மையாய் உழைக்கும் மக்களுக்காக ஜெபியுங்கள். இந்த ஊழியத்தை இன்னும் மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள் மற்றும் ஒத்தாசைகளை நல்கி ஊக்கப்படுத்துங்கள்.

எங்களுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள். பலவித ஆவிக்குரிய யுத்தங்களை சந்திக்கிறோம். எங்களுடன் ஊழியம் செய்யும் பல ஊழியர்கள் சரீர பிரகாரமாக பெலவீனமாக இருக்கின்றனர். காணிக்கைகளை அனுப்பி ஆதரிக்கிற உங்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களைப் பாதுகாக்க ஜெபிக்கிறோம்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக, ஆமென்!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

கவனிக்கலாம். ஒரு சிறு கூட்ட மக்கள் முன் இயேசுவை மூன்று முறை மறுதலித்த பேதுரு, ஆயிரக்கணக்கான மக்கள் முன் சுவிசேஷத்தை தைரியமாகப் பிரசங்கித்தான். எங்கேயிருந்து அவருக்கு இந்த தைரியம் வந்தது? அவருக்குள் கிரியை செய்த பரிசுத்த ஆவியானவரே காரணம்!

**கிரியை செய்யும் விசுவாசம்!**

விசுவாசத்தைக் கிரியையில் வெளிப்படுத்தும்போது, ஒரு சாதாரண மனிதனை, பரிசுத்த ஆவியின் உருமாற்றும் வல்லமை, அசாதாரண மனிதனாக எவ்வாறு மாற்றுகிறது என்று அப்போஸ்தலர் 3 ஆம் அதிகாரம் தெளிவாக விளக்கிக் காண்பிக்கிறது. விசுவாசத்தை நாம் கிரியையில் காண்பிக்கும்பொழுது நடக்கும் மாற்றத்திற்கு இது ஒரு சிறந்த உதாரணம். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்ற சீஷர்கள் செய்த முதல் அற்புதத்தை இந்த அதிகாரம் விளக்கிக் காண்பிக்கிறது.

## அப்போஸ்தலர் 3 ஆம் அதிகாரம்
## பேதுருவும் யோவானும்!

இந்த அதிகாரத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போம். பேதுரு, யோவான், அந்த பிறவியிலேயே நடக்க முடியாத நபர் ஆகியோருக்கு அந்த நாள் எப்போதும் போல ஒரு சாதாரண நாளாயிருந்தது. நாம் நன்றாகப் புரிந்து கொள்ள, அந்த மனிதனை 'டாம்' என்ற பெயரில் அழைக்கப்போகிறோம். தேவாலயத்திற்குச் செல்ல அவர்கள் மூவரும் எப்போதும்போல சாதாரணமாகவே ஆயத்தமாயிருந்திருப்பார்கள். பேதுருவும், யோவானும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்தோடு சென்றார்கள். ஆனால் அந்த டாம் என்பவன், தனது அன்றைய வருமானத்தைத் தேடி அங்கு சென்றிருந்தான். ஆனால், இம்மூவருக்குமே, தேவன் அந்த நாளில் அவர்களுக்கு திட்டம் பண்ணி வைத்திருந்தது தெரியாது. அந்த நாள் அவர்களது வாழ்க்கையையே மாற்றும் நாள் என்று அவர்கள் சற்றும் நினைக்கவில்லை.

### பின்னணி கதை:

வழக்கத்தின்படியே பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குப் போனார்கள். அவ்வாறு போனபோது, தேவாலயத்தின் வாசலண்டையில் டாம் என்ற மனிதனைச் சந்தித்தார்கள். அவன் ஒவ்வொரு நாளும், பிறரால் சுமந்துவரப்பட்டு, தேவாலயத்தின் வாசலில் அமர்ந்து பிச்சை கேட்பான். அவன் பிறவியிலேயே நடக்க முடியாதவனாக பிறந்திருந்தான். அவனுக்கு 40 வயது இருக்கும். அந்த பகுதியிலிருந்த யூதருக்கு அவன் நன்கு அறிமுகமானவனாயிருந்தான். நூற்றுக்கணக்கான மக்கள் அந்த ஆலயத்திற்குப் போகும்போதும், வரும்போதும் அவனைப் பார்த்திருப்பார்கள். சிலர் அவனுக்குப் பிச்சை கொடுத்திருக்கலாம். சிலர் அவனை அலட்சியப்படுத்தியிருக்கலாம்.

40 வருடங்களாக இவன் ஆலயத்தின் வெளியே அமர்ந்திருந்து தன் காலத்தைக் கழித்ததை நினைக்கும்போது, வருத்தமாகவே உள்ளது. அவனிடம் அந்த ஆலயத்தின் பழக்க வழக்கங்கள், நிகழ்ச்சிகள் குறித்து கேட்டால் சரியாகச் சொல்ல முடியும். அந்த ஆலயத்திற்கு வந்து போவோர்களின் பெயர்கள், குடும்பங்கள் குறித்தும் அவனால் சொல்ல முடியும். தேவாலயத்தின் தலைவர்கள் மற்றும் அங்கு பாடப்படும் பாடல்கள் போன்றவற்றைக் கேட்டாலும் அவனால் சொல்ல முடியும். ஏனென்றால் அவன்தான் அதே இடத்தில் 40 வருடங்களாக இருந்து வருகிறானே! அநேக தேவ செய்திகளைக்கூட அவன் வெளியில் அமர்ந்தவாறே கேட்டிருக்கலாம். அவனை ஆலயத்தினுள் கொண்டு செல்ல யாருமில்லை.

நம்மில் சிலர் இப்படித்தான் இருக்கிறோம். நமக்கு தேவன் யார் என்று தெரியும். அவரது அற்புத கிரியைகளைப் பற்றி தெரியும். அவரது அற்புத வல்லமையைப் பற்றியும் தெரியும். நாமும் பல பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறோம். பல பாடல்களையும் பாடியிருக்கிறோம். ஆனால் இன்னும் அவரது பிரசன்னத்தை உணராமல் வெளியே நிற்கிறோம். தேவனோடு தனிப்பட்ட விதத்தில் உறவு கொள்ள முடியாமல் காணப்படுகிறோம். நம்மில் சிலர் கடந்த கால மகிமையான அனுபவங்களைக் குறித்தே மேன்மை பாராட்டிக் கொண்டிருக்கிறோம். நாம் ஒரு காலத்தில் அப்படியிருந்தோம். ஆனால், இன்று நம் நிலைமை என்ன? இயேசு கிறிஸ்துவோடு நடக்கும் நடை எங்கே? அவருடைய பிரசன்னத்திற்குள் இருக்கிறீர்களா அல்லது அவருக்கு வெளியே இருக்கிறீர்களா?

தேவாலயத்திற்குள் டாமை அழைத்துச் செல்ல யாருமில்லை. தேவபிரசன்னத்திற்கு வெளியே, வெகு தொலைவில் நீங்கள் இருப்பவரானால், இந்த செய்தி உங்களை தேவ பிரசன்னத்திற்கு வெகு அருகாமையில் கொண்டு வரட்டும்.

அந்த நாளில் டாம் வழக்கம்போல பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். பேதுரு அவனை உற்றுப் பார்த்து, அவன்மேல் தன் கண்களைப் பதித்தவராய் "எங்களை நோக்கிப் பார்" என்றார். பேதுரு ஏன் அவ்வாறு டாமை நோக்கிப் பார்த்தார்? பேதுருவையும், யோவானையும் பார்த்து டாம் எதுவும் வழக்கத்துக்கு மாறான விதத்தில் பிச்சைக் கேட்கவில்லை. அவ்வழியே கடந்து போகுபவரிடத்தில் பொதுவாக அவன் கேட்பது போலத்தான் இவர்களிடத்திலும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


# நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : தமிழ்

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.**

Diploma in Ministry : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்
Bachelor of Theology : மூன்று வருடங்கள்

**கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 அக்டோபர் 19 முதல் நவம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

அக்டோபர் 19 ⇨ **அழைப்பின் எதிரொலி பத்திரிகை ஊழியத்தினை** 1969 முதல் இன்றுவரை நிறைவேற்றி வருவதற்காக...

அக்டோபர் 20 ⇨ பத்திரிகை ஊழியத்தின் மூலமாக சந்திக்கப்படாத இடங்களில் சுவிசேஷம் பரவச் செய்த கிருபைக்காக ...

அக்டோபர் 21 ⇨ 55–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைத்ததைக் குறிக்கும் வருடாந்திர கன்வென்ஷனை சிறப்பாக நடத்த உதவி செய்த கிருபைக்காக...

அக்டோபர் 22 ⇨ கடந்த மாதம் நடைபெற்ற நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களை ஆசீர்வதித்ததற்காக...

அக்டோபர் 23 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக...

அக்டோபர் 24 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

அக்டோபர் 25 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகமக்கல்வி முறைகளின்** வளர்ச்சிகளுக்காக...

அக்டோபர் 26 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

அக்டோபர் 27 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் கர்த்தர் பாதுகாத்துவரும் கிருபைக்காக...

அக்டோபர் 28 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

அக்டோபர் 29 ⇨ உலக தேசங்களைப் பாதுகாத்து வருகிறதற்காக...

அக்டோபர் 30 ⇨ இதர ஊழியங்களைத் தாங்கச் செய்த கிருபைக்காக...

அக்டோபர் 31 ⇨ நமது ஊழியங்களைத் தாங்குபவர்களுக்காகவும், அவர்களது ஈடுபாட்டிற்காகவும்...

நவம்பர் 01 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி, அஞ்சல்வழி இறையியல்** மற்றும் **வேதாகமக்கல்வி** ஆகியவற்றின் செயல்பாடுகளை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

நவம்பர் 02 ⇨ உலகத்திலுள்ள வேதாகமம் மற்றும் கிறிஸ்தவ நூல்களை அச்சிடும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் தேவைகளை சந்தித்து வருவதற்காக ...

நவம்பர் 03 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு உடல்நலம் மற்றும் தேவபாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

நவம்பர் 04 ⇨ நமது ஆங்கில இணை ஆசிரியரான டாக்டர் A. ரிச்சர்ட் சாமுவேல் அவர்களை இழந்து தவிக்கும் அவர்களது குடும்பத்தினரின் தெய்வீக ஆறுதலுக்காக...

நவம்பர் 05 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** தலைமைச் சபை மற்றும் கிளைச்சபையின் விசுவாசிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனுக்காக...

நவம்பர் 06 ⇨ போதைப்பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டி ...

நவம்பர் 07 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காக...

நவம்பர் 08 ⇨ நமது முழுநேர மற்றும் மாலை நேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** மாணவர்கள் நல்லொழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் விளங்க...

நவம்பர் 09 ⇨ நமது தலைமைப் போதகர் எழுதிவரும் சுயசரிதைக்கான வழிநடத்துதல்களையும் மற்றும் வழிவாசல்களையும் அபரிமிதமான அளவில் ஆசீர்வதிக்க வேண்டி...

நவம்பர் 10 ⇨ உலக தேசங்களின் ஒற்றுமை மற்றும் சமாதானத்திற்காக...

நவம்பர் 11 ⇨ உலகளாவிய மக்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக வேண்டி ...

நவம்பர் 12 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல உதவ வேண்டி...

நவம்பர் 13 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நல்ல ஆரோக்கியத்திற்காக ...

நவம்பர் 14 ⇨ உலகில் நடைபெற்றுவரும் குழந்தைக் கடத்தலை அகற்ற வேண்டி...

நவம்பர் 15 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் மற்றும் சபைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

நவம்பர் 16 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்காக...

நவம்பர் 17 ⇨ Omicron, Nipah மற்றும் BA. 2.86 போன்ற தொற்று வகைகளின் பரவலைத் தடுக்க வேண்டி...

நவம்பர் 18 ⇨ அனைத்து கிறிஸ்தவ ஊழியங்களிலும் கர்த்தரின் வல்லமையான அற்புதங்கள், அதிசயங்கள் மற்றும் அடையாளங்கள் நடக்க வேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டான். ஆனால் டாமின் முழு கவனமும் தன் மேல் இருக்க வேண்டுமென பேதுரு விரும்பினார். ஏனென்றால் தங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடிய ஏதோ முக்கியமான ஒன்று அப்போது நடக்கப்போவதை பேதுரு உணர்ந்திருந்தார். எனவேதான், டாமின் முழு கவனத்தையும் அவர் ஈர்க்க விரும்பினார்.

பரிசுத்த ஆவியானவர் நம்மேல் வரும்போது, நாம் நமது கர்த்தருக்காக அசாதாரணமான, மிகப்பெரிய காரியங்களைச் செய்யும் வல்லமையை அவர் தருகிறார். அவர்கள் விசுவாசம் கிரியை செய்ய ஆரம்பித்தது. அது கிரியையுள்ள விசுவாசம். நமது விசுவாசம், அசாதாரணமான விசுவாசமாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

**1. அசாதாரண விசுவாசம் பெற அசாதாரண தரிசனம் தேவை – காணக்கூடியதற்கு அப்பாலானவைகளைக் காணும் வல்லமை!**

டாமின் சரீர நிலைமைக்கு அப்பாலான ஒரு நிலைமையை பேதுரு பார்த்தார். டாம் ஒரு மாற்றுத்திறனாளி. அவன் ஒரு பிச்சைக்காரன். எந்த பொருளாதார அந்தஸ்தும் இல்லாதவன். அவனது அன்றாட கடமைகளை நிறைவேற்ற பிறருடைய உதவியை எதிர்ப்பார்ப்பவன். ஒரு சில காசுகளை அவனுக்குக் கொடுத்துவிட்டு பேதுரு ஆராதிக்கக் கடந்து சென்றிருக்கலாம். ஆனால் அவர் அவ்விடத்தில் நின்று அந்த மனிதனோடு கொஞ்ச நேரம் செலவழிக்க தீர்மானித்தார்.

தேவாலயத்திற்குள் செல்ல பேதுரு அவசரப்பட்டிருக்கலாம். ஆனால், இந்த மனிதனுக்காக நேரம் செலவழித்தார். நம்மைச் சுற்றிலும் உள்ள மக்களுக்காக நாம் நேரம் செலவழிக்கிறோமா? அல்லது நம்முடைய சொந்த வேலையைச் செய்யவே நாம் ஓடிக் கொடிருக்கிறோமா? நம்மில் சிலர் நம்முடைய சொந்த வாழ்க்கை, நமது வேலை, நமது ஆவிக்குரிய வாழ்க்கை ஆகியவைகளிலேயே கவனம் செலுத்தி, நம்மைச் சுற்றிலும் இருக்கிற மக்களின் தேவைகளை அறிந்துகொள்ளத் தவறி விடுகிறோம்.

ஒரே ஒரு மனிதனுக்காக பேதுரு ஆலயத்துக்குள் செல்லாமல் நின்றதை நாம் பார்க்கிறோம். இதை அவர் தனது தலைவரிடமிருந்து கற்றுக் கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

காட்டத்தி மரத்தின்மேல் உட்கார்ந்திருந்த ஒரு மனிதனுக்காக இயேசு கிறிஸ்து நின்றார். 12 வருடங்களாக உதிரப்போக்குடன் வேதனையிலிருந்த ஒரு பெண்ணுக்காக இயேசு கிறிஸ்து நின்றார். கிணற்றண்டையிலே வந்த அந்த ஒரு பெண்ணைச் சந்திக்க இயேசு அவ்விடம் சென்றார். ஒரு பெரிய புயலைக் கடந்து, தெக்கப்போலி என்ற இடத்தினருகே அசுத்த ஆவி பிடித்த ஒரு மனிதனைச் சந்திக்க இயேசு சென்றார். ஆகையால்தான், ஒரே ஒரு மனிதனின் முக்கியத்துவத்தைப் பேதுரு அறிந்திருந்தார்! நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். எப்பொழுது நாம் கடைசியாக ஒரு மனிதனுக்கு அன்பு, அரவணைப்பு, கவனம் செலுத்த நின்றிருப்போம்?

அந்த மனிதனின் சரீர தேவைக்கு அப்பால் அவனுக்குத் தேவையான ஆவிக்குரிய விடுதலையை பேதுருவால் பார்க்க முடிந்தது. "எங்களை நோக்கிப் பார்" என்று பேதுரு சொல்ல அவனும் பேதுருவை நோக்கிப் பார்த்தான். மக்களுடைய சரீரத் தேவைகளுக்கு அப்பால் நம்மால் பார்க்க முடிகிறதா? அநேக நேரங்களில் நாம் பிறரை நியாயந்தீர்க்கிறவர்களாய் இருக்கிறோம். யாருக்கு இயேசு கிறிஸ்து தேவை என்றும் யாருக்கு இயேசு கிறிஸ்து தேவையில்லை என்றும் நாமே தீர்மானித்து விடுகிறோம். "அவன் எதுவும் கேட்கமாட்டான்", "அவனிடத்தில் யார் போய் பேசுவார்கள்?" என்று பலரும் சொல்லும் வார்த்தைகளை நாம் கேட்டிருக்கலாம். நமது சாட்சியைப் பகிரும்பொழுதுகூட, யாரிடத்தில் சொல்ல வேண்டும், யாரிடத்தில் சொல்லக்கூடாது என்று நாமே தீர்மானித்து விடுகிறோம். ஒருவருக்கு இயேசு கிறிஸ்து தேவையா இல்லையா என்பதை அவரது வெளித்தோற்றத்தை வைத்தே தீர்மானிக்கிறோம்.

நமது அசாதாரண விசுவாசத்தை நாம் செயல்படுத்த வேண்டுமானால், அசாதாரண பார்வையுடன் நமது சரீரக் கண்களுக்குப் புலப்படாத பார்வையுடன் பார்க்க ஆரம்பிக்க வேண்டும்.

டாம் எந்த அற்புதத்தையும் அப்பொழுது எதிர்ப்பார்க்கவில்லை. பேதுருவும் ஒரு சுகமளிக்கும் ஆராதனை நடத்தத் திட்டமிடவில்லை. அவர்களுடைய அசாதாரண விசுவாசத்தை அவர்கள் செயல்படுத்தியபோது, அந்த அற்புதம் நடந்தது. உங்கள் அசாதாரண விசுவாசத்தைச் செயல்படுத்தி, உங்கள் விசுவாசத்தை செயலில் காண்பிப்பீர்களா?

ஆழமானதைக் காண உற்றுப்பார்க்க வேண்டும். உங்களைச் சுற்றிலுள்ள மக்களை எப்பொழுது கடைசியாக உற்றுப் பார்த்தீர்கள்? உங்கள் சபை அங்கத்தினர்களை – அவர்கள் வெளி நிலைக்கு அப்பால், அவர்கள் எங்கேயிருந்து வந்திருக்கிறார்கள், அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று உற்று கவனியுங்கள். ஆழமாய், ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பிறரைக் காண நேரம் செலவழியுங்கள்!

தொடர்ச்சி 8-ம் பக்கம்.....

முழுநேர இந்தி வகுப்புகள்
நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.
வேளச்சேரி, சென்னை
போதனா மொழி : இந்தி
Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.
Diploma in Ministry : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்
Bachelor of Theology : மூன்று வருடங்கள்
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 3. அழைப்பின் எதிரொலி தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன். | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| 4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (மூன்று இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – | ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – | ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி |
| 14. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 18. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 19. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 20. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 21. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 22. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| 23. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4.00 மணி |
| 24. இரவு ஜெபம் | – | 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 25. உபவாச ஜெபம் | – | மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 26. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 27. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி |
| 28. பணியாளர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 29. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.


## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :




தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி
### பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# குழிக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## வாக்கு மாறாத தேவன்

1969–ஆம் வருடம் தேவன் என்னைத் தமது மகத்தான ஊழியத்தைச் செய்யும்படி அழைத்தார். 1971–ஆம் வருடம் எரேமியா 51:20 முதல் 23 வசனங்களில் உள்ள கீழ்க்கண்ட வாக்குத்தத்தங்களைக் கொடுத்து என்னை அதிகமாய் உற்சாகப்படுத்தினார்.

**“நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்; நான் உன்னைக் கொண்டு ஜாதிகளை நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன். உன்னைக்கொண்டு குதிரையையும், குதிரை வீரனையும் நொறுக்குவேன்; உன்னைக் கொண்டு இரதத்தையும் இரதவீரனையும் நொறுக்குவேன். உன்னைக்கொண்டு புருஷனையும் ஸ்திரீயையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு கிழவனையும், இளைஞனையும் நொறுக்குவேன்; உன்னைக் கொண்டு வாலிபனையும் கன்னிகையையும் நொறுக்குவேன். உன்னைக்கொண்டு மேய்ப்பனையும், அவனுடைய மந்தையையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு உழவனையும், அவனுடைய உழவுகாளைகளையும் நொறுக்குவேன்; உன்னைக் கொண்டு அதிபதிகளையும், அதிகாரிகளையும் நொறுக்குவேன்”.**

இவற்றில் உள்ள வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றும் இக்காலத்தில் **அழைப்பின் எதிரொலியின்** ஒவ்வொரு தனித்தனி ஊழியமாக (Separate Ministry) செயல்படுவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். **ஆண்டவர் வாக்கு மாறாதவர்.**

அவற்றில் ஒன்று நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்,... நான் உன்னைக் கொண்டு அதிபதிகளையும் அதிகாரிகளையும் நொறுக்குவேன் என்பதாகும். அதன்படி 1978–ம் வருடம் முதல் 1980–ம் வருடம் வரை நான் வகித்து வந்த அரசு பதவியின் அடிப்படையில் சென்னை கடற்கரைப் பகுதியில் உள்ள அரசு அலுவலர் குடியிருப்பில் வசிக்க நேர்ந்தது.

**“உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்...” (ஏசாயா 54:17)**

அந்த நாட்களில், அந்தக் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஒரு பெரிய மாடி அறையை (Hall) வாடகைக்கு எடுத்து அங்கு வசித்துவந்த அதிகாரிகளுக்கு சுவிசேஷத்தை அறிவித்து வந்தேன். ஏராளமான உயர் அதிகாரிகளும், பிறரும் ஆண்டவரால் தொடப்பட்டு, ஆவியிலும், சரீரத்திலும் நன்மைகளைப் பெற்றனர்.

அந்தப் பகுதியில் எனக்கு வசதி கிடைக்கும்போது திறந்தவெளிக் கூட்டங்களை நடத்துவது வழக்கம். அப்படி திறந்தவெளிக் கூட்டங்களை நடத்தி, நான் வேதவசனங்களைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது என் ஊழியங்களுக்கு எதிராக செயல்படும் மக்கள் தங்கள் அடியாட்களை ஏவி விட்டு, எனக்கு நேராகத் தூரத்தில் நின்று என்னை பயமுறுத்தி, இரண்டுச் சக்கர வாகனங்களில் ஆயுதங்களை வைத்துக் கொண்டு கூடியிருக்கும் மக்களையும் என்னையும் சுற்றிச் சுற்றி வந்து தடைகளை ஏற்படுத்தி வந்தனர். அநேக நேரங்களில் நான் சரீர பிரகாரமாகத் தாக்கப்பட்டதால், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நான் பயத்துக்குள்ளான நாட்கள் பல உண்டு. இது மட்டுமின்றி, எனக்கு வாடகைக்கு இடம் தந்த நபரையும் சந்தித்து, நான் கூட்டங்களை நடத்த முடியாதபடி தடைகளை ஏற்படுத்தினர்.

இப்படியாக நாட்கள் கடந்தன, என்னை ஆண்டவர் கைவிடாமல் உயர்த்திக் கொண்டே போனார். யாராலும் என்னை மேற்கொள்ள முடியாதபடி கர்த்தருடைய பலத்தக் கரம் என்னோடு இருந்தது, எனக்கு விரோதமாகக் கிரியை செய்த மக்களை மன்னித்து, இரட்சிக்கும்படி நான் அவர்களுக்காக ஜெபித்திருக்கிறேன். ஆனால், பின் நாட்களில் அவர்களில் பலரை நான் சந்திக்கவில்லை. சிலரை நான் சந்தித்திருக்கிறேன். அவர்களில் சிலரை ஆண்டவர் சந்தித்து இரட்சித்திருக்கிறார்.

**“கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்”** (சங்கீதம் 34:8).

*******

... 6–ம் பக்கத் தொடர்ச்சி

சவுலாகிய பவுலிடமும், யோவான் மார்க்கிடமும் ஆழமும், சிறப்பானவைகளையும் பர்னபா கண்டார். வெளியரங்கமான சரீர தோற்றத்திற்கு அப்பால், மக்களின் ஆவிக்குரிய தேவைகளைக் காணும் பார்வையை தேவன் நமக்குத் தந்தருள்வாராக.

### 2. அசாதாரண விசுவாசம் அசாதாரண தைரியத்தைக் கொடுக்கும்!

நம்மில் அநேகர் நமது பாதுகாப்புக்கும் நமது அன்றாட பழக்க வழக்கங்களுக்கும் மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, நமது வசதியான சூழ்நிலைக்குள்ளேயே இருக்க விரும்புகிறோம். நாம் வயதாகும்பொழுது, சாகசக் கிரியைகளைக் குறைத்துக் கொள்வோம். நானும் அப்படிப்பட்டவள்தான். ஒருவித மனக்கிளர்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஆபத்தான வாகன சாகசங்கள் மற்றும் சில பொழுதுபோக்கு பூங்காக்களில் காணப்படும் 'ரோலர் கோஸ்டர்' எனப்படும் பூமிக்கு மிக உயரத்தில் பறக்கும் 'ட்ரெயின்' போன்ற சாகசங்களுக்கு என் இள வயதில் போனதுண்டு. ஆனால் காலம் செல்லச் செல்ல என் மனநிலை மாறத் தொடங்கிறது. 'ஏன் நான் தேவையில்லாத சவால்களைச் சந்திக்க வேண்டும்? ஏதாவது தவறு நடந்தால் என்ன ஆகும்' என்று யோசிக்கலானேன். என்னைப்போல, பலரும் இவ்வாறு பாதுகாப்பான இடத்தில் இருப்பதையே விரும்புகிறோம்.

அந்த பிச்சைக்காரனைக் காணாததுபோல, யோவானுடன் எதையாவது பேசிக்கொண்டே பேதுரு கடந்து போயிருக்கலாம். நாமும் கையில் சில்லறை இல்லையென்றால் இப்படித்தானே நடந்து கொள்வோம்? ஆனால் பேதுருவோ தைரியமாக முன்னேறி, ... **“வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்”**... என்றார். (அப்போஸ்தலர் 3:6).

இது வெறும் தைரியமான நடவடிக்கை அல்ல; இது ஒரு அசாதாரண செயல். தன்னுடைய விசுவாசத்தை அந்த மனிதனுக்குள் பேதுரு செலுத்தினார். அப்போஸ்தலர் 14:8–19இல் பவுல் இதேபோல பிறவியிலே நடக்க முடியாத ஒரு நபரை எழுந்து நடக்க வைத்ததை வாசிக்கலாம். இரு சம்பவங்களுக்கிடையில் உள்ள வித்தியாசம் என்னவென்றால், பவுலால் சுகமாக்கப்பட்டவனுக்கு விசுவாசம் இருந்தது. ஆனால் பேதுரு சுகமளித்த மனிதனுக்கு விசுவாசம் இருந்ததா இல்லையா என்று வேதம் குறிப்பிடவில்லை. இங்கே பேதுருவும், யோவானும் தங்களுடைய விசுவசத்தை அவனுக்குள் செலுத்தினார்கள்.

நம்மைச் சுற்றிலுமுள்ள மக்களுக்குள் இத்தகைய விசுவாசத்தை நாம் செலுத்த வேண்டுமென தேவன் விரும்பி நம்மை அழைத்திருக்கிறார். நமது விசுவாசத்தைப் பிறருக்குள் செலுத்துகிறோமா? அநேக நேரங்களில் நம்மைப் போல விசுவாசம் உள்ளவர்களோடு நமது விசுவாசத்தை பகிர்ந்து கொள்கிறோம். வேறு விதமான விசுவாசம் உள்ளவர்களிடமோ அல்லது எந்த விசுவாசமும் இல்லாதவர்களிடமோ நமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ள தயங்குகிறோம்.

அன்பு நண்பர்களே! நம்மைச் சுற்றியுள்ள மக்களிடத்தில் நம் விசுவாசத்தை வெளிப்படுத்தி, அவர்களுக்கு அதைக் கொடுக்க வேண்டும். பிறருடைய வாழ்க்கையில் நமது விசுவாசத்தை விதைக்க நம் நேரத்தை ஒதுக்க ஆயத்தமாவோம்.

தனது அசைக்க முடியாத உறுதியான விசுவாசத்தைப் பயன்படுத்த பேதுருவுக்கு தைரியம் இருந்தது. அந்த மனிதனுக்கு சுகம் கிடைக்கவில்லையென்–றால் என்ன செய்வது என்று ஒரு நொடி கூட பேதுரு நினைக்கவில்லை. திட நம்பிக்கையோடு, 'நீ எழுந்து நட' என்றார் பேதுரு.

பேதுருவிடமிருந்த அந்த கட்டளை அந்த மனிதனுக்குப் புரியவில்லை என்று நாம் புரிந்து கொள்ளலாம். ஏனென்றால் அடுத்த வசனம் இவ்வாறாகச் சொல்கிறது: "வலது கையினால் (பேதுரு) அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்" அப்பொழுதுதான் தன்னால் எழுந்து நடக்க முடியும் என்று அந்த மனிதன் புரிந்து கொண்டான்.

பேதுரு சொன்னார்: 'நீ எழுந்து நட.'

தங்களது வலதுகையைப் பிடித்து யாராவது தூக்கிவிட மாட்டார்களா என்று பலரும் இன்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவ பிரசன்னத்திற்கு மிக அருகில் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இன்றும் வாசலுக்கு வெளியிலேதான் இருக்கிறார்கள். ஒரு அசாதாரண தைரியம் அவர்களை உள்ளே கொண்டுவர தேவைப்படுகிறது.



டாமின் நிலைமையினால் பேதுருவுக்கும், யோவானுக்கும் எந்த பின்னடைவும் வரவில்லை. மாறாக கர்த்தருடைய வார்த்தையை வல்லமையோடும், அவரது வல்லமையை செயல்படுத்திக் காண்பிக்கவும் அவனே காரணம் என்று அறிந்தார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நமது விசுவாச வாழ்க்கையில் நம்மை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தக் கூடாது. தேவனோடு தனிமையில் நாம் நேரம் செலவழிக்க வேண்டியது நல்லதுதான். ஆனால் நமது நேரம், முயற்சி மற்றும் நமது திறமைகள் போன்றவற்றைப் பிறருக்காகச் செலவிடவும் வேண்டும். உங்களைச் சுற்றிலுமுள்ள மக்களிடத்தில் ஜீவனுள்ள வார்த்தைகளை, அசாதாரண தைரியத்துடன் பேசுங்கள். பாதுகாப்பாய் வாழ்ந்துவிட முயற்சிக்காதீர்கள்.

## 3. அசாதாரண விசுவாசம் அசாதாரண சவால்களைக் கொண்டு வரும்!

நமது அசைக்கப்படாத விசுவாசம் அசாதாரண விசுவாசத்துக்கு நேராய் நம்மை வழிநடத்தும். இந்த அசாதாரண விசுவாசம் அசாதாரண சவால்களைக் கொண்டுவரும். கிறிஸ்தவ வாழ்க்கையின் பாதை அநேக சவால்களால் நிறைந்தது. இந்த பாதை ரோஜா மலர்களால் நிறைந்த படுக்கை என்று வேதாகமம் கூறவில்லை. நம்மை நாமே வெறுத்து, நமது சிலுவையைச் சுமக்க வேண்டும்.

மனிதனுடைய வாழ்க்கையையே மாற்றக்கூடிய இந்த அற்புதத்தை நடத்திய பிறகு, பேதுருவையும், யோவானையும் யாரும் கொண்டாடவோ, மதிக்கவோ இல்லை. மாறாக, அவர்கள் சிறையில் அடைக்கப் பட்டார்கள். எனது அன்பு நண்பர்களே, நமது வாழ்வில் தேவ நோக்கம் நிறைவேற சாத்தான் பலவித தடைகளையும் கொண்டு வருவான். இருப்பினும், நமக்காக தேவன் வகுத்துள்ள தெய்வீகத் திட்டத்தைத் தடுக்க எந்த மனித வல்லமையாலோ, பாதாள வல்லமையாலோ முடியவே முடியாது.

பேதுருவையும், யோவானையும் சிறையில் அடைத்து, பயங்கரமாக பயமுறுத்தி, இயேசுவின் நாமத்தைக் குறித்து பேசக்கூடாது என்று கட்டளையிட்டார்கள். இத்தகைய காரியங்கள் அவர்கள் ஊழியத்தைத் தடை செய்யவில்லை.

எனதருமை நண்பர்களே! அசாதாரண நேரங்களில், அசாதாரண நடவடிக்கைகள் தேவைப்படும். நமது விசுவாசத்தைப் பயன்படுத்தி அதைச் செயலில் காண்பிக்கும் போது, நாம் அதிக பிரச்சினைகளையும், சவால்களையும் சந்திக்க நேரிடும். ஆனால் நாம் நமது விசுவாசத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஒரு போதும் நாம் பின்னிட்டுப் பார்க்கவோ, பின்வாங்கவோ கூடாது. ஆனால் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்.

நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் 14:22 நமக்குப் போதிக்கிறது. அத்தகைய சூழ்நிலைகளில் நாம் நமது ஆத்துமாக்களை பெலப்படுத்தி, விசுவாசத்தில் தொடர வேண்டும்.

"**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்**" என்று சங்கீதம் 34:19 கூறுகிறது.

தேவ பக்தியுள்ள வாழ்க்கையில் பாடுகள் கிடையாது என்று சொல்ல முடியாது. கடந்த கால வரலாற்றில், விசுவாசத்தில் உறுதியாயிருந்த ஆண்கள் மற்றும் பெண்கள் பலவித போராட்டங்கள் மற்றும் பிரச்சனைகளை அனுபவித்துள்ளார்கள். போராட்டங்கள், கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும், ஆலயம் செல்பவர்களுக்கும், ஆலயம் செல்லாதவர்களுக்கும் போராட்டங்கள் வருவதினால் நீங்கள் கெட்டவர்கள் என்றோ தீய மக்கள் என்றோ கருதக்கூடாது. இவ்விரண்டு கூட்டத்தாருக்குமிடையே வித்தியாசம் உண்டு. ஒரு தேவ பிள்ளை

## தேவை
## நூலகப் புத்தகங்கள்

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும், நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கும்** உள்ள தனித்தனி நூலகங்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்கள் (Library Books) தேவைப் படுகின்றன. பழைய அல்லது புதிய புத்தகங்களை நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் அவற்றை எங்களுக்கு வழங்க விரும்பினால் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

போராட்டங்களைச் சந்திக்கும்பொழுது, தேவன் அவற்றை அறிவார் என்றும், அவன் தேவனது கரத்தில் பாதுகாப்பாய் இருக்கிறான் என்றும் நிச்சயமாய் நம்பலாம்.

உங்கள் சூழ்நிலை மிக மோசமான நிலையிலிருந்தாலும், நீங்கள் தனிமையாயில்லை. தேவன் உங்களை விசாரிக்கிறவராய், உங்கள் போராட்டங்களின் மத்தியில் உங்களோடு இருக்கிறார். இன்றே உங்கள் அசாதாரண விசுவாசத்தை செயல்படுத்துங்கள்.

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**வருட சந்தா ரூ. 100/–** **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 29th SEPTEMBER 2023
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**